*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 3(1) 2020*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received: 16th July 2020/Accepted: 17th September 2020*

# சூழல், உயிர்ப்பல்வகைமை மற்றும் இஸ்லாம்

# ENVIRONMENT, BIO DIVERSITY AND ISLAM

**S.M. Ayoob**

Department of Sociology, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka
ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

## Abstract

*Islam proposed multiple instructions to preserve the environment that is surrounded by living organisms include biotic and abiotic elements. This research is conducted with the aim of explaining the instructions given by the Islam on preserving the environment and bio diversity. Al-Quran, Al-Hadees and related Islamic sources were used in this study to collect secondary data. The study identified multiple teachings and instructions on preserving the environment and bio diversity. Giving spiritual value to the environment, giving survival value to the environment, enriching the sources of the environment and ensure the safe custody and the protection are the basic concepts of Islam on environment and bio diversity. This research tries to ascertain the above mentioned thoughts and concepts of Islam on environment and bio diversity based on Islamic historical sources.*

**Key words:** *Bio-diversity, Biotic, Environment, Living organism*

***ஆய்வுச் சுருக்கம்***

வாழும் உயிரினத்தைச் சுற்றிக் காணப்படும் உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளை அதாவது சூழலைப் பாதுகாக்கும்படி இஸ்லாம் பல்வேறு போதனைகளை முன்வைக்கின்றது. அத்தகைய போதனைகளை திரட்டி விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு இரண்டாம் நிலை மூலாதாரங்களையும் இஸ்லாமிய மூலாதாரங்களையும் பயன்படுத்துகின்றது. ஆய்வின் முடிவில் சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான பல்வேறுபட்ட போதனை வடிவங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. ஆன்மீகப் பெறுமானம் பொடுத்தல், உயிர்ப் பெறுமானம் கொடுத்தல், சூழலை விருத்தி செய்தல், அழிவுகளிலிருந்து பாதுகாத்தல் போன்றவை சூழல் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடுகளாகும். இக்கருத்தை வரலாற்று ஆதாரங்களை முன்வைத்து இவ்வாய்வு நிரூபிக்க முனைகின்றது.
**திறவுச் சொற்கள்:** சூழல், உயிர்ப்பல்வகைமை, உயிரியல் கூறுகள், உயிரினம

## 1. அறிமுகம்

சூழல், சூழல் அமைப்பு, சூழலியல், உயில்பல்வகைமை போன்ற சொற்கள் ஊடகங்களில் இன்று அதிகமதிகம் பேசப்படுகின்றன. வாழும் ஒரு உயிரினத்தைச் (Living organism) சுற்றிக் காணப்படும் உயிருள்ள (Biotic) மற்றும் உயிரற்ற (Abiotic) கூறுகளின் கூட்டுமொத்தமே சூழல் (Environment) எனும் சொல்லால் குறிக்கப்படுகின்றது. உயிரியல் கூறுகளில் தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் போன்றனவும், உயிரற்ற கூறுகளில் நிலம், நீர், ஆகாயம், சூரிய ஒளி, காற்று போன்றனவும் அடங்கும் (அய்யூப், 2019).

சூழலில் காணப்படும் உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளுக்கிடையில் இடம்பெறும் சீரான இயக்கம் சூழல் அமைப்பு (Ecosystem) என அழைக்கப்படுகின்றது. உயிருள்ள ஒரு ஜீவராசி உயிரற்ற ஒட்சிசனை உள்ளெடுக்கும் செயற்பாட்டை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

முறைமையான இடைவினை
(Systematic Interaction)

உயிருள்ள (Biotic) ⟷ உயிரற்ற (Abiotic)

சூழலியல் (Ecology) என்பது உயிரினம் எவ்வாறு சூழலுடனும் ஏனைய உயிரினங்களுடனும் இடைவினை புரிகின்றது என்பதைக் குறிக்கின்றது. சூழலியலானது சூழல் அமைப்பைப் படிக்கும் கற்கையாகும் (Ecology is the study of ecosystems).

உயிர்ப்பல்வகைமை என்பது (Bio diversity) பூமியில் காணக்கூடிய அனைத்து வகையான உயிரினங்களையும் (தாவரங்கள், விலங்குகள், பூஞ்சை மற்றும் நுண்ணுயிர்கள்) அவை உருவாக்கும் சமூகங்களையும் (Communities) அவை வசிக்கும் வாழ்விடங்களையும் (Habitants) குறிக்கின்றது. வேறு வகையில் சொன்னால் சூழல் முறைமையின் பல்வகைமை மற்றும் மாறும் தன்மை குறித்த கற்கையாகும். (It is the study of variety and variability of ecosystem).

உயிர்ப்பல்வகைமை மூன்று வகையாக பிரிக்கப்படுகின்றது.

**அ. மரபியல் பல்வகைமை (Genetic diversity)**
ஒரு இனத்துக்குள் (Species) காணப்படும் மரபணுக்களின் வகையை விளக்கின்றது.

**ஆ. இனங்கள் பல்வகைமை (Species diversity)**

மனிதன் பாம்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றான் என ஆராய்வதை இதற்கு உதாரணமாக கூறலாம். அதேபோல் பாம்பு இனத்துக்குள்ளேயே காணப்படும் வகைகள், யானை இனத்துக்குள்ளேயே காணப்படும் வகைகள் (ஆசிய யானை, ஆபிரிக்க யானை) போன்றவற்றை படிப்பதையும் இக்கற்கை குறிக்கின்றது.

**இ. சூழல் அமைப்பு பல்வகைமை (Ecosystem diversity)**

இயற்கையில் உள்ள வித்தியாசங்களையும் அதனை அடிப்படையாகக் கொண்டு உயிரினங்கள் வாழும் விதத்தையும் இது குறிக்கின்றது. சூடான பாலைவனங்களில் எத்தகைய உயிரினங்கள் வாழுகின்றன குளிரான இடங்களில் எத்தகைய ஜீவராசிகள் வாழுகின்றன போன்ற ஆய்வுகள் இவற்றில் உள்ளடங்கும்.

## 2. ஆய்வு நோக்கம்

விஞ்ஞானங்களும், தொழிநுட்பங்களின் விருத்தியும் சூழலை சூறையாடி உயிர்ப் பல்வகைமையை நாசம் செய்ய முனையும் ஒரு சூழலில் சூழலையும் உயிர்ப் பல்வகைமையையும் பாதுகாப்பதற்கு இஸ்லாமிய போதனைகள் எவ்வாறு முனைகின்றன என்பதனை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 3. ஆய்வுப் பிரச்சினை

சூழலைப் பேணிப் பாதுகாப்பதன் முக்கியம் குறித்தும், சூழல் அழிவுறும்போது மனித வாழ்வும் அழிவுறும் என்பது குறித்தும் மானிட சமூகம் அறிந்து வைத்திருக்கின்றது. இருப்பினும் ஏன் மானிட சமூகமும் அதன் உறுப்பினர்களும் சூழலை சிதைக்க முனைகின்றார்கள் என்பது மிக முக்கியமானதொரு பிரச்சினையாகும்.

## 4. ஆய்வு முறையியல்

ஆல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் ஆய்வுடன் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் குறிப்புகள், இணையவழிக் கட்டுரைகள் போன்ற இரண்டாம் நிலை மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விபரண முறையில் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 5. ஆய்வு முடிவுகளும் கலந்துரையடல்களும்

**சூழல் பல்வகைமை, இஸ்லாம்**
சூழல் மற்றும் பல்வகைமை தொடர்பாகவும் அவற்றை பேணிப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும் இஸ்லாம் விரிவாக பேசுகிறது.
**அ. ஆன்மீகப் பெறுமானம் கொடுத்தல்**

சூழல் பராமரிப்பு ஒரு முஸ்லிமின் நம்பிக்கைக் கோட்பாட்டுடன் தொடர்புபடுகின்றது. ‘‘முஸ்லிம்களின் பாதையில் யார் மன வேதனை தரும் தீங்குகளை விளைவிக்கின்றாரோ

அம்முஸ்லீம்களின் சாபம் அவர் மீது நிச்சயமாகிவிடும்'' என நபியவர்கள் கூறியிருப்பது இதற்கு தெளிவான ஆதாரமாகும் (பகீஹுத்தீன், 2018).

சூழல் தன் படைப்பாளனுக்கு சிரம் பணிந்து (Prostration) அவன் புகழ் பாடுவதாக (Glorification) இஸ்லாம் கூறுகின்றது. படைப்பாளனை சந்திக்கச் சென்ற முஹம்மது நபியவர்களுக்கு தொழுகை என்னும் வணக்கம் பரிசாக வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதாக நம்புவது இஸ்லாமிய மரபு. சூழலுக்கு தன்னை வணங்கும் படியும் புகழ்பாடும் படியும் செய்து சூழலையும் மனித சமூகத்தைப் போலவே கௌரவித்திருக்கிறான் அல்லாஹ்.

வானங்கள் பூமியில் உள்ளவை அனைத்தும் 'சுஜூது' (Prostration) அதாவது சிரம்பணிந்து அல்லாஹ்வை வணங்குகின்றன. அதேபோல் அல்லாஹ்வை 'தஸ்பீஹ்' அதாவது மகிமை (Glorification) செய்கின்றன என்பது அல்குர்ஆனின் கருத்தாகும்.

''அல்லாஹ் படைத்துள்ளவற்றை அவர்கள் பார்க்கவில்லையா? அவற்றின் நிழல்கள் வலமும் இடமும் சாய்ந்து, அல்லாஹ்வுக்கு சுஜூது செய்து அடிபணிகின்றன. வானங்கள் பூமியில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் மலக்குகளும் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்கின்றன (அல்குர்ஆன், 16:48,49).

'வானங்கள் பூமியில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கு தஸ்பீஹ் செய்கின்றன. அவன் அறிந்தவன், கண்ணியமானவன்' (அல்குர்ஆன், 59:01).

''அவனது புகழைக் கொண்டு இடியும், அவனுடைய அச்சத்தினால் வானவர்களும் புகழ்ந்து துதிக்கின்றனர்'' (அல்குர்ஆன், 13:13).

''வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும், மனிதர்களில் பெரும்பாலானவர்களும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்கின்றன என்பதனை நீர் பார்க்கவில்லையா?'' (அல்குர்ஆன், 22:18).

''வானங்களிலும் பூமியிலும் இருப்பவையெல்லாம், விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ்வுக்கே சுஜூது செய்கின்றன. அவற்றின் நிழல்களும் காலையிலும் மாலையிலும் அவ்வாறே செய்கின்றன'' (அல்குர்ஆன், 13:15).

''நட்சத்திரங்களும், மரங்களும் அவனுக்கே சுஜூது செய்கின்றன'' (அல்குர்ஆன், 55:6).

இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல் ''படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பமாக காணப்படுகின்றன'' என்பது முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வார்த்தையாகும்.

**ஆ. உயிர்பெறுமானம் கொடுத்தல்**

உயிருள்ள பொருட்களை போலவே உயிரற்ற பொருட்களுக்கும் உயிர்ப் பெறுமானம் கொடுத்துப்பார்க்கின்றது இஸ்லாம். ஒரு முறை முஹம்மத் நபி (ஸல்) கைபர் போரிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது உஹத் மலை கண்களுக்குப் புலப்படுகின்றது. அப்போது ''இந்த உஹத் மலை எங்களை விரும்புகின்றது. நாமும் அதனை விரும்புகின்றோம்'' என கூறினார்கள். இன்னுமொரு தடவை உஹத் மலையில் நடுக்கம் ஏற்பட்ட போது ''உஹதே அமைதியாக இருப்பாயாக'' என அம்மலையை விழித்து நபியவர்கள் பேசினார்கள். மற்றொரு முறை நபியவர்கள் ஈச்சமரக் குற்றிகளால் புதிதாக செய்யப்பட்ட பிரச்சார மேடையில் ஏறிய போது ஒரு அழுகைச் சத்தத்தை கேட்கின்றார்கள். பழைய பிரச்சார மேடையிலிருந்து புறமொதுக்கப்பட்ட ஈச்சங்குற்றியின் அழுகைச் சத்தமென்பது பின்னர்தான் தெரியவருகின்றது. அப்போது பழைய ஈச்சங் குற்றியையும் புதிய ஈச்சங் குற்றிகளோடு சேர்த்துக் கொண்ட போது அந்த அழுகைச் சத்தம் நின்று போனதாக இஸ்லாமிய மரபில் ஒரு கதையுண்டு (அய்யூப், 2019).

மேலே சுட்டிக்காட்டிய சம்பவங்கள் மூன்றும் மலையோடும், மரக்குற்றிகளோடும் சம்மந்தப்பட்டவை. எனினும் நபியவர்கள் உயிர்ப்பொருட்களைப் போலவே நடத்தியிருக்கின்றார் என்பது தெரிய வருகின்றது.

வானம், பூமி, அவற்றிலுள்ளவை, பறவைகள், இடி போன்ற அத்தனையும் இறைவனை மனிதர்கள் துதிப்பது போன்று துதிப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. மனிதனைப் போன்றே இயற்கையும் உயிர் வாழ்கின்றது. இயற்கை என்பது வெறுமனே சடமன்று. அதற்கு

பண்புத் தன்மையும் (Qualitative value) ஜீவனும் உண்டு என்பது இஸ்லாத்தின் கருத்தாகும் (சுக்ரி, 1995).

### இ. சூழலை வளப்படுத்தலும் விருத்தி செய்தலும்

பூமியை வளப்படுத்துவது மனிதன் இவ்வுலகில் மேற்கொள்ள வேண்டிய மூன்று பணிகளில் ஒன்றாகும். இது இமாறத் என அழைக்கப்படுகின்றது. இபாதத், கிலாபத் என்பனவே ஏனைய இரண்டு பணிகளுமாகும். பூமியை அதன் வளங்களைப் பயன்படுத்தி வாழ்வதற்குப் பொருத்தமானதாக மாற்றுவதற்கும், அதனைத் தொடர்ந்து நிலைபெறச் செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்படி இஸ்லாம் ஒவ்வொரு மனிதனையும் தூண்டுகின்றது (அப்துல் றஹீம், 2013). "அவனே உங்களைப் பூமியிலிருந்து தோற்றுவித்து அதனைப் பரிபாலிக்குமாறும் கேட்டுக் கொண்டான்" (அல்குர்ஆன் 11:61). மற்றும் "நீங்கள் விரும்பியவாறு வளைந்து கொடுக்கும் வகையில் பூமியை நாங்கள்தான் வடிவமைத்தோம். அதன் பல் திசைகளிலும் பரந்து சென்று அல்லாவின் ரிஸ்கைப் பெற்றுக் கொளளுங்கள்" (அல்குர்ஆன் 67:15) எனும் அல்குர்ஆனிய வசனங்கள் இக்கருத்துக்கு மேலும் துணை சேர்க்கின்றன.

நபியவர்களது போதனைகள் பல சூழலை விருத்தி செய்யும்படி கேட்டுக் கொள்கின்றன. "ஒரு முஸ்லிம் ஒரு பயிரை நாட்டுகின்றான். அதிலிருந்து யாரேனும் சாப்பிட்டாலும் சரி, திருடினாலும் சரி, ஒரு பறவையோ மிருகமோ சாப்பிட்டாலும் சரி, யாரேனும் அதிலிருந்து எடுத்துக் கொண்டாலும் சரி அனைத்துமே அவனுக்கு நன்மையாக அமைந்து விடும்" (முஸ்லிம்) எனும் நபியவர்களது போதனை பூமியை மரங்களால் நிறைக்கும்படி தூண்டிவிடுகின்றது. "தரிசு நிலம் ஒன்றை யார் விருத்தி செய்கின்றாரோ அது அவருக்கு சொந்தமாகும்" (திர்மிதி) எனும் நபியவர்களது போதனை பூமியை செழிப்பால் வளப்படுத்தும்படி தூண்டுகின்றது.

### ஈ. அழிவுகளிலிருந்து பாதுகாத்தல்

இஸ்லாம் மனித வாழ்வை சூழலுடன் இணைத்துத் தான் நோக்கியிருக்கிறது. சூழலைத் தவிர்த்து மனித வாழ்வு தனித்துப் பயணிக்க முடியாது. உலகில் மனித வாழ்வு நிலைத்திருக்க சூழலும் நிலைத்திருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இஸ்லாமிய சட்டத்தில் ஐந்து இலக்குகளான மார்க்கத்தைப் பாதுகாத்தல், அறிவைப் பாதுகாத்தல், பரம்பரையைப் பாதுகாத்தல், செல்வத்தைப் பாதுகாத்தல் பற்றி இமாம் ஷாதிபி பேசும் போது 'பாதுகாத்தல்' எனும் சொல் இரண்டு அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடுகின்றார்.

4.1. நேர்மைப் பக்கம் அதாவது அபிவிருத்தி செய்தல்

4.2. எதிர்மைப் பக்கம் அதாவது அழிவிலிருந்து பாதுகாத்தல்

எனவே பாதுகாத்தல் என்பது அபிவிருத்தி செய்து அழிவிலிருந்து பாதுகாப்பதைக் குறிக்கின்றது (அக்ரம், 2018).

ஐரோப்பிய சிந்தனையில் குறிப்பாக, மேலைத்தேய தத்துவ ஞானத்தின் வளர்ச்சியில் டேக்காட் (Rene Descartes) முக்கியமானவர். ஐரோப்பிய சிந்தனை இவரிலிருந்து ஆரம்பிப்பதாக கூறப்படுகின்றது. 'நான் சிந்திக்கின்றேன் எனவே நான் இருக்கின்றேன்' எனும் டேக்காட்டின் கோட்பாடு உள்ளம் (Mind), சடம் (Matter) ஆகிய இரண்டிற்குமிடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்தியது. மனிதனது உள்ளத்தை உடலிலிருந்து வேறுபடுத்தும் முயற்சியாக ஆரம்பித்த இக்கோட்பாடு, கால ஓட்டத்தில் மனிதனை இறைவனிலிருந்து அந்நியப்படுத்தியது (Alienation from God). அதனைத் தொடர்ந்து இயற்கையிலிருந்து அந்நியப்படுத்தி (Alienation from nature), இறுதியில் அவனிலிருந்தே அவனை அந்நியப்படுத்தியது (Alienation from self). டேக்காட்டினதும் மற்றும் சடவாதம், மதச்சார்பின்மை போன்ற சிந்தனைகளினதும் தாக்கம் இயற்கையை துஷ்பிரயோகம் செய்வதற்கும், அதனை எதிரியாக பார்ப்பதற்கும் வலுச் சேர்த்துள்ளது. தொழில்நுட்பத்தின் உன்னத வளர்ச்சியுடன் சடவாதத்தின் சிந்தனைக்கு ஆட்பட்ட மனிதன் தனது தேவைக்கு மேலாக இயற்கையை அனுபவிக்கத் தொடங்கிய போது துஷ்பிரயோகம் ஆரம்பமானது. இயற்கை வளங்கள் அழியத் தொடங்கின. சூழல் மாசடையத் தொடங்கியது. மறுபுறம் மேற்கு சிந்தனைகள் இயற்கையை எதிரியாக பார்க்கும் மனோ நிலையை உருவாக்கியது. சுருங்கக் கூறின் சூழல் பிரச்சினைக்கும் அதன் அனைத்து விளைவுகளுக்கும் அடிப்படைக் காரணம் நவீன ஐரோப்பாவில் மேலாதிக்கம் செலுத்தும்

இயற்கை பற்றிய ஒருதலைப்பட்சமான அறிவியல் தொழில்நுட்ப ரீதியான அணுகுதலாகும் (சுக்ரி, 1995).

சூழலை நாசம் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்வதும் நாசகார நடவடிக்கைகளுக்குள் சூழல் அகப்படாமல் பாதுகாப்பதும் முக்கியமான பணிகளாகும். இஸ்லாம் மிக அதிகமான வழிகாட்டல்களை இது தொடர்பாக வழங்குகின்றது. ''உண்ணுங்கள், குடியுங்கள் வீண்விரயம் செய்யாதீர்கள்'' என்பது இஸ்லாத்தின் பொது அறிவுறுத்தலாகும்.

''வழிப்போக்கர்களும் மிருகங்களும் நிழல் பெறக்கூடிய வகையில் வெட்ட வெளியில் நிற்கக்கூடிய நிழல்தரும் மரம் ஒன்றை யார் அநியாயமாக வெட்டி விடுகிறாரோ அவரது தலையைப் பிடித்து அல்லாஹ் நரகில் தள்ளுவான்'' (அபூதாவுத்) எனும் நபியவர்களது ஹதீஸ் மரங்களை வெட்டுவதை கடுமையான தொனியில் எச்சரித்து சூழலை பாதுகாக்க வேண்டுகின்றது.

சூழலை நாசம் செய்வது நரகத்தில் மிக மோசமான தண்டனை பெறும் நயவஞ்சகனின் பண்பாகும். ''அவன் (நயவஞ்சகன்) திரும்பிச் சென்றால் பூமியில் விவசாயத்தையும் பரம்பரையையும் அழிக்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவான்'' (02:205) என அல்குர்ஆன் எச்சரிக்கின்றது.

இந்தப் பூமி மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதனது அடிப்படைத் தேவைகள் சூழலின் அங்கங்களால் நிறைவு செய்யப்படுவதை இஸ்லாம் தடுக்கவில்லை. ஆனால் எல்லை மீறிய பாவனையையும் துஷ்பிரயோகத்தையும் வீண்விரயத்தையும் தடுக்கின்றது.

''ஒருவர் எந்தப் பயனும் இன்றி ஒரு குருவியைக் கொலை செய்தாலும் மறுமையில் அந்தக் குருவி அல்லாஹ்விடம் இது தொடர்பாக முறையிடும்'' (நாஸாஇ) என நபியவர்கள் கூறினார்கள்.

விலங்கினங்களோடு கடுமையாக நடந்து கொள்பவர்களை இஸ்லாம் வன்மையாக கண்டிக்கின்றது. மனிதன் எவ்வளவு நல்லவனாகவும் உயர்ந்தவனாகவும் இருந்தாலும் விலங்கினங்களை கொடுமையாக நடத்திடுவானேயானால் அவன் நரத்துக்கு அனுப்பப்படலாம். இது இஸ்லாம் எடுத்துரைக்கும் தெளிவான எச்சரிக்கையாகும் (முஹம்மது அல் கஸ்ஸாலி, 2002). ஒரு பெண் ஒரு பூனையை கட்டிப்போட்டாள் அதற்கு அவள் உணவளிக்கவுமில்லை, அவிழ்த்துவிடவுமில்லை, அவள் அவிழ்த்து விட்டிருந்தால் அது தனது உணவைத் தேடியிருக்கும். இந்தக் குற்றத்திற்காக அவள் நரகத்துக்கு அனுப்பட்டாள் (புஹாரி) என நபியவர்கள் கூறினார்கள்.

அதேபோல் இதயத்தில் இரக்கம் சுரந்தால் அது பாவங்களை மன்னிக்கச் செய்து சுவர்க்கத்துக்கு குறிப்பிட்ட மனிதனை அழைத்துச் செல்கின்றது. கீழ்படியாத பெண்ணொருத்தி, ஒரு நாய் மிகுதியான வெப்பத்தால் ஒரு கிணற்றை உற்றுப் பார்க்க கண்டாள். அந்த நாயின் நாக்கு தாகத்தால் வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் தனது சோடு நிரம்பத் தண்ணீர் கொண்டு வந்து அந்த நாயைக் குடிக்கச் செய்தாள். இச்செயலுக்காக அவளுக்கு பாவமன்னிப்பு வழங்கப்பட்டது (முஸ்லிம்).

மேலே விளக்கப்பட்ட சம்பவங்களில் ஒரு புனையை கட்டிப் போட்டதற்காக நரகம் ஒரு பெண்ணுக்கும், ஒரு நாய்க்கு தண்ணீர் புகட்டியதற்காக பாவமன்னிப்பு ஒரு பெண்ணுக்கும் வழங்கப்படுகின்றது. பாவங்கள் மன்னிக்கப்பட்டால் சுவர்க்கம் கிடைக்கும் என்பது இஸ்லாத்தின் போதனை. எனவே பூனையும், நாயும் சுவர்க்கத்தையும் நரகையும் இச் சம்பவங்களில் தீர்மானிக்கின்றன.

''சாபத்தை ஏற்படுத்தக்கூடிய மூன்று விடயங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள். அவை நீர்நிலைகளில் மலம் கழித்தல், பொதுவீதிகளில் மலம் கழித்தல், நிழல்களில் மலம் கழித்தல்'' (அபூதாவுத்) எனும் நபியவர்களது போதனை ''நீ சூழலை நாசம் செய்தால் உன் வாழ்வில் சாபங்கள் தொடரும்'' எனக் கூறுகின்றது. அதேபோல் நீர் தேங்கி நிற்கும் நீர்நிலைகளில் சிறுநீர் கழிப்பதை நபியவர்கள் வன்மையாக தடுத்திருக்கின்றார்கள் (முஸ்லிம்).

பெரும் பெரும் தொழிற்சாலைகளின் கழிவுகள் நீர்நிலைகளை மட்டுமன்றி வளிமண்டலத்தைக் கூட மாசுபடுத்தி, உயிர்வாழ்வை கேள்விக்குட்படுத்தும் இக்கால சூழலில் ஒரு சிறியளவிலான கழிவகற்றல் நடவடிக்கையால் கூட சூழல் மாசுபட்டுவிடக் கூடாது என்பதில் நபியவர்கள்

கண்ணும் கருத்துமாக இருந்திருக்கின்றார்கள் என்பதனை நபியவர்களது இந்த அறிவுறுத்தல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

### உ. வரலாற்று ஆதாரங்கள்

இஸ்லாமிய சாம்ராஜியத்தின் முதலாவது கலீபா தனது படையை யுத்தத்திற்காக அனுப்பிய போது "காய்க்கும் மரங்களை வெட்டாதீர்கள், மக்கள் வாழும் பிரதேசங்களைக் தாக்கியழியாதீர்கள், உணவுக்காகவன்றி ஆடுகளையோ, ஒட்டகங்களையோ அறுக்காதீர்கள், தீயிட்டு தேனீக்களை எரிக்காதீர்கள்" என தனது படையை எச்சரித்தார்கள்.

நீர் வளங்களாக இருந்தாலும் சரி வேறு எதுவாக இருந்தாலும் சரி வீண்விரயமின்றி பாவிக்க வேண்டும் என்பது இஸ்லாத்திக் கருத்தாகும். நீர் என்பது இயற்கையின் அற்புதமான கொடையாகும். மூன்றாவது உலகப்போர் நீருக்கானது என்று கூட சொல்லப்படுகின்றது. இந்நிலையில் நீரை சிக்கனமாக கவனமுடன் பாவிக்கும் படி இஸ்லாம் கூறுகின்றது. சுத்தம் செய்தல் எனும் பெயரால் தண்ணீர் வீணாக விரயமாக்கப்படுவதை நபியவர்கள் தடுத்தார்கள். நபியவர்கள் வாழ்க்கையை அவதானித்தால் அவர்கள் மூன்று லீற்றர் தண்ணீரில்தான் குளித்தார்கள். 750 மில்லிலீற்றர் தண்ணீரில்தான் வுழுச் செய்து கொண்டார்கள் (அபூதாவுக்). தண்ணீர் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு இதனை விட வேறு உதாரணங்கள் தேவைப்படுவதில்லை.

தூய தண்ணீர் கிடைக்காமல் 200 கோடி மக்கள் அவதிப்படும் இச்சூழலில் "தண்ணீரைப் பொறுத்தவரை மனிதர்கள் யாவரும் அதில் பங்காளிகள்" என நபியவர்கள் கூறியிருக்கிறார்கள் (பகீஹுத்தீன், 2018).

நபியவர்களது காலத்துக்கு பின் வந்த இஸ்லாமிய அரசுகள் கூட சூழல் பாதுகாப்பு குறித்து பேசியிருக்கின்றன. "ஈராக்கின் யூப்ரடீஸ் நதிக்கரையில் ஒரு ஆட்டுக்குட்டி தடுக்கி விழுந்தாலும் அதற்கு நானே பொறுப்பு, அது பற்றி இறைவன் என்னை விசாரிப்பான்" என இரண்டாவது ஆட்சியாளர் உமர்(றழி) அவர்கள் கவலைப்பட்டிருக்கின்றார்கள். ஆட்டின் இரண்டு கால்களையும் பிடித்து அறுக்க கொண்டு சென்ற மனிதனைப் பார்த்து உமர்(றழி) அவர்கள் "உங்கள் மீது இறைவனின் கோபம் இறங்கி விடும். அந்த ஆட்டை முறையாக அழைத்துச் செல்லுங்கள்" (ஹாகிம்) என்று கூறினார்கள். இயற்கை வளங்களின் பாதுகாப்பு குறித்த அச்சத்தின் வெளிப்பாடே இதுவாகும். அதேபோல் ஒட்டகங்களின் முதுகில் குறிப்பிட்ட அளவை விட கூடுதலான பொதிகள் ஏற்றப்படுவதை கலீபா உமர் இப்னு அப்துல் அஸிஸ் தடுத்தார்கள்.

## 6. முடிவுரை

மனித வாழ்வை இஸ்லாம் சூழலுடன் இணைத்தே நோக்குகின்றது. சூழல் மனிதனுக்கு எதிரியல்ல. மாறாக அவன் தோழமை கொள்வதற்கான சிறந்த நண்பன் என இஸ்லாம் கூறுகின்றது. சூழலுக்கு இஸ்லாம் ஆன்மீகப் பெறுமானமும், உயிர்ப்பெறுமானமும் கொடுக்கின்றது. மேலும் சூழலை விருத்தி செய்யும் படியும் அழிவிலிருந்து பாதுகாக்கும் படியும் வேண்டுகின்றது.

### உசாத்துணை நூல்கள்


அல்-குர்ஆன்,

அல்-ஹதீஸ் நூல்கள்

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கைதென்கிழக்குப் பல்களைக்கழகம்

அப்துல் றகுமான். (1995). *முட்டை வாசிகள்.* சென்னை: கவிக்கோ பதிப்பகம்.

அக்ரம் அப்துல் ஸமத் (2018, ஏப்ரல் 11). சூழலைப் பாதுகாத்தல்: இஸ்லாமிய ஷரீஆவின் மகாஸிதுகளில் ஒன்று. Retrieved from https://salamah.lk/%E0%AE%9A%E0%AF%82%E0%AE%B4%E0%AE%B2%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%81%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%87%E0%AE%B8%E0%AF%8D/

அப்துல் றஹீம். (2013, மார்ச்,01). சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம். Retrieved from http://archives.thinakaran.lk/2013/03/01/?fn=r1303012.

அப்துல் றஹீம். (2013, மார்ச்,15). சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம். Retrieved from http://archives.thinakaran.lk/2013/03/15/?fn=r1303154.

அப்துல் றஹீம். (2013, மார்ச்,22). சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம். Retrieved from http://archives.thinakaran.lk/2013/03/22/?fn=r1303225.

ஆத்ரேயா. (2019, ஏப்ரல், 01). ஒழுங்கின்மைக் கோட்பாடு. Retrieved from https://roar.media/tamil/main/miscellaneous/chaos-theory-butterfly-effect/

சுக்ரி, எம். ஏ. எம். (1995). இஸ்லாமும் சூழலியலும். *இஸ்லாமிய சிந்தனை*, 17(3), 10-17

சிவம். (2006, ஏப்ரல், 13). ஒழுங்கின்மைச் சித்தாந்தம் (பாகம்-1). Retrieved from http://web.archive.org/web/20060427220227/http://agarathai.blogspot.com/2006/04/01-1.html.

முஹம்மத் பதீஹுத்தீன் (2018, பெப்ரவரி, 2018). பசுமைச் சூழலை நேசிப்போம், பாவமறியா ஜீவன்களை காப்போம். Retrieved from https://salamah.lk/%e0%ae%aa%e0%ae%9a%e0%af%81%e0%ae%ae%e0%af%88%e0%ae%9a%e0%af%8d-%e0%ae%9a%e0%af%82%e0%ae%b4%e0%ae%b2%e0%af%88-%e0%ae%a8%e0%af%87%e0%ae%9a%e0%ae%bf%e0%ae%aa%e0%af%8d%e0%ae%aa%e0%af%8b%e0%ae%ae%e0%af%8d/

முஹம்மது அல் கஸ்ஸாலி. (2002). இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் (தமிழில் எம். குலாம் முஹம்மத்). சென்னை: இக்ரா பதிப்பகம்.

Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.

Haralambos and Holborn, (2000). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.

Rao Sankar, (2007). *Sociology*: *Primary Principles.* New Delhi: S. Chand and Company Ltd.